தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 104

நம் நாடு

திராவிட தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY — THE OFFICIAL ORGAN OF THE D.F.F

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
ஞாயிற்றுக்கிழமை மலர் இதழ் கிடையாது.

சென்னை: புரட்டாசி 27உ செவ்வாய் (13—10—53) ★ ★ ★ வெளியூர்: புரட்டாசி 28உ புதன் (14—10—53)

கண் கெட்ட பிறகு ஞாயிறு வணக்கம்!

—(:)—

தொடையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டும் திருப்பணி!

இந்திய விடுதலைக்கு காந்தியார் மட்டுமல்ல போர்க்களங்கண்ட மாவீரர்களும் காரணம்!

— (0) —

"சோற்றுப் பட்டாளம்" என்று பழித்த வாய், சிப்பாய்களுக்கு இன்று புகழ் மாலை சூட்டுகிறது

கவர்னரின் கண்ணும் தெரிகிறது—கருத்தும் தெளிகிறது

"மகாத்மா காந்தியாலும், அவருடைய கோட்பாட்டினுல் மட்டுமே, இந்தியாவிற்கு சுயராஜ்ஜியம் வந்துவிடவில்லை என்றும், நாட்டுக்கு வெகு தொலைவில் உள்ள போர்க்களங்களில் இருந்த வீரமிக்க இந்திய சிப்பாய்களாலுந்தான் சுயராஜ்ஜியம் கிடைத்தது என்று நம்பிக் கொண்டிருக்கிறவர்களில் நானும் ஒருவனுகும்."

"கடந்த இரண்டு யுத்தங்களில், இந்திய சிப்பாய்கள் வீரச்செயல்களைப் புரிந்திருக்கிருர்கள். இத்துறையில் அவர்கள் மற்றவர்களுக்கு பின்னடைந்தவர்கள் அல்லர்!"

"இந்தியாவின் வெளிப் பகுதிகளில் உருவான வாழ்க்கை லட்சியங்களை இந்திய மக்கள் உணர உதவி செய்த அப்பெரியார்களுக்கு நாம் கட்டுப்பாடு உடையவர்களாக இருக்க வேண்டும்."

பூனா, அக். 12—

'சென்ற பெரும்போரில் காயப்பட்டு அங்கப் பழுதடைந்துள்ள சிப்பாய்களின் தொழிற் பயிற்சி கல்விக் கூட்டத்தின் ஆண்டு விழாவில் தலைமை வகித்துப் பேசிய சென்னை கவர்னர் கனம் பிரகாசா அவர்கள் மேலே எடுத்துக் காட்டியுள்ளது போல் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசியது வருமாறு:—

"இந்தியாவிற்கு அரசியல் விடுதலை கிடைத்ததிலிருந்து, வெளிநாடுகளின் சிறந்தவர்கள் பெயரை அழித்து விடுவதில் சிலர் அதிக தீவிரம் காட்டுகின்றனர்."

"அந்தச் சிறந்தவர்களின் திருநாமங்களை நாம் மறந்து விட முயற்சிப்பதின் மூலம், வரலாற்றுச் சுவடியின் ஏடுகளை அழித்துவிட முடியாது."

"மன எழுச்சியும், கெடுமதியும் நமது செயலுக்குத் தூண்டுதலாக இருக்கக் கூடாது."

விஞ்ஞானிகள் செல்கின்றனர்!

பெர்லின், அக். 13—

செஞ்சீனுவில், தொழிற்சாலைகள், விஞ்ஞானப் பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளை ஏற்படுத்துவதில் உதவுவதாகக் கிழக்கு ஜெர்மனி 500 விஞ்ஞானிகளையும் டெக்னிஷியன்களையும் அனுப்புமாம்.

'ஏக இந்தியா'—ஓர் ஏமாற்று வித்தை!

கோவா மட்டிலும் விதி விலக்காவது ஏன்?

பம்பாய், அக். 11—

இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் நேரு பம்பாய்க்கு வந்திருந்த போது, கோவா தேசியத் தலைவர் டாக்டர் ட்ரின்டாவ் டிப்ரா சன்காகுன் ஹாம் தலைமையில் ஒரு தூது கோஷ்டி பண்டித நேருவைச் சந்தித்தது.

கோவாவியர்களின் ஐக்கிய முன்னணி கட்சிக் காரியதரிசி பர்டாடோ, பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில்,

"கோவா இந்தியாவுடன் இணைந்ததும், அது இந்தியாவுக்குள் சுய ஆட்சி உரிமை பெற்ற நாடாக இருக்கும்,"

என்று, நேரு, தூதுக் குழுவினரிடம் கூறியதாகக் குறிப்பிட்டார்.

"விடுதலை படைந்த பின், கோவாவின் அந்தஸ்து, மூன்று பிரிவு ராஜ்யங்களில் ஏதாவது ஒன்றின் நிலை வருமா?" என்று கேட்ட போது, நேரு பதிலளிக்கையில், "கோவா, காஷ்மீர் போல இருக்கு மென்றும், இப்போது அந்த வட்டாரத்தில் பேசும் மொழியில் தான் ஆட்சி நடைபெறு மென்றும் கூறினுர்,"

என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'சமூக விரோதிகள்' யார்?

நியூயார்க், அக். 13—

அமெரிக்காவிலுள்ள 878 சமூக விரோதிகளை, ஐசன்ஹோவர் நிர்வாகம் 'பிரஷ்டம்' செய்துள்ளது. சொன்னை இளைப்படித்தவர்கள், ஏமாற்றி பிரஜா உரிமை பெற்றவர்கள், போலிப் பேர்வழிகள் எல்லோரும் இதில் அடங்கியவர்கள்.

துணிகள் தேக்கம் பற்றி முதலாளிகளின் முதலைக் கண்ணீர்

மத்தியத் தொழில் ஆய்வுக் குழுவில் விவாதம்

புதுடெல்லி, அக். 13—

ஆமதாபாத்தில், 14 ஜவுளி மில்களில், சில பகுதிகளை மூடி, உற்பத்தியைக் குறைக்கப் போவதாக பயமுறுத்தியிருப்பதின் விளைவாக சுமார் 10,000 தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடும் பிரச்சினை பற்றி நேற்று மத்திய தொழில் ஆலோசனைக் கவுன்சிலின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

"இந்த நிலைமையை சமாளிக்க கமிட்டியின் யோசனையை டி. டி. கிருஷ்ணமாச்சாரி கோரினுர்.

"பண்டங்கள் பற்றாக்குறையாக இருக்கிறதென்று புகார் செய்து கொண்டிருக்கிற அதே சமயத்தில் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகி வருவது விந்தை" யென்று திட்ட அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா கூறினுர்.

"ஆமதாபாத்தில் மில்டுகள் மூடப்பட்டதால் ஆமதாபாத்தின் நிலை மோசமாகு" மென்றும் அவர் கூறினுர்.

முதலாளிகள், துணிகள் விற்கவில்லை யென்றும், உற்பத்தியானவைகளெல்லாம் குவிந்து கிடப்பதாகவும் கூறினர்.

அதற்கு டி. டி. கிருஷ்ணமாச்சாரி பதிலளிக்கையில், 'கட்டுப்பாட்டை நீக்கு என்று கர்ஜித்தவர்கள் எல்லாம் விற்பனையாகவில்லை என்று கூறுவது விந்தை," என்றுர்.

'நாட்டின் விளைச்சல் இவ்வாண்டு திருப்திகர மென்றும், இன்னும் இரண்டு மாதத்தில் அதிக ஜவுளி விற்பனையாகு" மென்றும் ஜி. டி. பிர்லா கூறினுர்.

ஆலைகளின் தகராறு

நடவடிக்கை எடுக்க முயற்சி

புதுடெல்லி, அக். 12—

இன்று தொழிலியல் மத்திய ஆலோசனைக் கவுன்சிலின் நான்காவது கூட்டம் கூடிற்று.

தகுதியான கணக்குப் பரிசோதகர்கள் மூலம், பம்பாயிலுள்ள 3 பருத்தி ஜவுளி மில்கள், ஏழு சர்க்கரை ஆலைகள் ஆகியவைகளின் விவகாரங்களின் மீது விசாரணை நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக இக்கூட்டத்தில் தொழில் மந்திரி டி.டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்தார்.

பம்பாயிலுள்ள இந்தியா யுனைடெட் மில் லிமிடெட்டின் 5 சர்க்கரை ஆலைகள் பற்றிய அறிக்கைகள் கிடைத்திருப்பதாகவும், தொழில் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமுன், இக்கூட்டத்தில் கூடியுள்ளோரின் ஆலோசனையை அறியவிரும்புவதாகவும் அவர் சொன்னுர்.

நீண்ட நேர விவாதத்திற்குப் பின், விசாரணை நடத்த ஒரு உப கமிட்டி நியமிக்கப்பட்டது.

இந்த உபகமிட்டிக்கு ஏ. ராமசாமி முதலியார் தலைவராகவும், ஜி.டி. பிர்லா, ஸ்ரீராம், கஸ்தூரிபாய் லால்பாய், எஸ். ஆர். வாசவதா, திருமதி மணி பென்காரா, என். என். ... கோ ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜாதி, தீண்டாமை ஆகிய இரண்டுமே வீழ்ச்சிக்குக் காரணம்

விஞ்ஞான நோக்கு இல்லாததால் ஏற்பட்ட கேடு

சித்தரஞ்சன், அக். 10—

"செயற்கைப் பாகுபாடான ஜாதி வித்தியாசங்களும், தீண்டாமைக் கொடுமையும் நமது வீழ்ச்சிக்கான இரண்டாம் காரணமாகும். மாநிலப் பித்தும் மேலோங்கி இருக்கிறது. மனித சமத்துவத்தையும், இந்தியாவின் ஒற்றுமையையும் குறித்து, தலைவர் போதித்து வந்தபோதிலும், மக்கள் இந்த அடிப்படைத் தத்துவங்களை மீறிக் கொண்டே இருக்கிருர்கள்."

"சமீப காலத்தில், யுத்தத்திலும் சரி, சமாதானத்திலும் சரி, விஞ்ஞானத் துறையில் பின்னடைந்து கிடப்பதின் விளைவாக, நாம் கஷ்ட கஷ்டப்பட்டிருக்கிறோம்."

இந்தியக் குடியரசின் துணைத் தலைவரான தோழர் எஸ். ராதாகிருஷ்ணன், மேற்கு வங்கத்தில் உள்ள சித்தரஞ்சன் நகரில் பேசும்பொழுது மேலே குறித்துள்ளபடி பேசினுர்.

வடகொரியாவில் ஆகாயப் படையை பெருக்குவதாக பொதுஉடைமையினர் மீது ஐ. நா. சபை குற்றச்சாட்டு!

யுத்த நிறுத்த உடன்பாடு மீறப்படுகிறதென்று புகார்!

வட கொரியாவில் போர் விமானங்களை அதிகப்படியாக, பொது உடைமையினர் கொண்டுவந்து நிறுத்தி இருப்பதாக ஐ. நா. சபை குற்றஞ் சாட்டி இருக்கிறது. இந்தப் போக்கு போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் புறம்பானது என்றும், உடனடியாக நடுநிலைக்குழு இது குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் ஐ. நா. வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளது.

ஐவர் சிறையில்!

இன்று

43-வது நாள்

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை : 13—10—1953 செவ்வாய்

சி. ஆர். மலானிசம்!

[2]

கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாருக்கும், கந்தன் கடம்பன் போலவே ஜாதி யுணர்ச்சி இருக்கிறது என்பதை, தம் வாய் மூலமாகவே அவர் ஒப்புக் கொண்டு இருக்கிறார். அவர், தமது உள்ளத்தை ஒளிவு மறைவு இல்லாமல் உலகத்தவற்கு அறிவித்ததற்காக, நாம் அவரை அளவுக்கு அதிகமாகவே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்திய அரசியல் சட்டம் விளக்கமாகக் கூறுவதுபோல, 'இந்தியன்' என்ற நினைப்பே அவர் கொள்வது கிடையாது. காங்கிரஸ் கட்சியினர் என்ற முறைகொண்டு பார்த்தாலும். ஆச்சாரியார் தம்மை ஒரு 'தேசிய'வாதி என்று இதுவரை எண்ணியதும் கிடையாது, எண்ணிக்கொண்டும் இல்லை, இனி எண்ணப் போவதுமில்லை. பெருமாள் கோயில் பட்டரைப் போன்றே தமக்கும் 'குறுகிய ஜாதி உணர்ச்சி' இருக்கிறது என்பதை அவரே ஏற்றுக்கொண்டு இருக்கிறார்! எவ்வளவு பெரிய வீழ்ச்சி?

ஆச்சாரியார் தேசத்துக்காகப் பாடுபட்டவர், சிறையில் கஷ்ட நஷ்டங்கள் அனுபவித்தவர், ஜாதிப் பாகுபாடு பாராமல் கொடுப்பனை மேற்கொண்டவர், உயர்ந்த தேசபக்தர், என்ற எல்லாச் சிறப்புகளையும் கொண்டுள்ள ஆச்சாரியார், 'ஜாதி உணர்ச்சி'யில் மற்றவர்களைவிட எவ்வளவு கீழான போக்கில் அமிழ்ந்து கிடக்கிறார் என்பதை காங்கிரசிலுள்ள நல்லறிவாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் ஆச்சாரியாரின் பொதுவாழ்வு, உரிமை வேட்கையினால் உந்தப்பட்டு அமைந்த ஒன்றல்ல, சொந்தத்தில் புகழும், செல்வாக்கும் தேடிக்கொள்ள எழுந்த 'வடிகட்டின சுயநல சேவை' கூறு கொண்டதேயாகும் என்பதை, கண்ணியம் உள்ள காங்கிரஸ் கட்சியினரால் தெரிந்து கொள்வது சுலபமாகும். எவ்வளவு பெரிய இமாலய ஏமாற்றம்!

விடுதலை போராட்டக்காலத்திலுல் சரி, இடையில் அதிகாரபீடத்தில் அமர்ந்திருந்த காலத்திலும் சரி, விடுதலைக்குப் பிறகு அவர் அதிகாரத்தில் இருக்கும் இந்தக் காலத்திலும் சரி, ஆச்சாரியார் தனது செயல்களுக்கெல்லாம், ஜாதி உணர்வையே, வழிகாட்டியாகக் கொண்டு நடந்துவந்து இருக்கிறார் என்பது வெள்ளிடைமலை. விஷயம் பெரியதாக இருந்தாலும் சிறியதாக இருந்தாலும், ஜாதியைப் பார்த்தே, ஆச்சாரியார் சலுகைக் காட்டி வந்திருக்கிறார் என்பதை, அவர் வாழ்க்கை வரலாறு ஐயத்திற்கு இடம் வைக்காமல் எடுத்துக்காட்டிக்கொண்டு இருக்கிறது.

ஆச்சாரியாருக்குள்ள ஜாதி உணர்ச்சி, மற்றவர்களுக்குள்ள ஜாதி உணர்ச்சியைவிட பயங்கரமானது; பெரிய அளவில் கேடு பயக்கக்கூடியது. கேட்டினை விளைவித்து இருக்கிறது என்பதற்கு விரிந்த வரலாறும் இருக்கிறது.

கட்டுண்டு கிடக்கும் மான், கட்டினை அறுத்துக்கொண்டு விடுதலைக்குப் போராடும் முயற்சியைப் போன்றது, மற்றவர்களுக்குள்ள ஜாதி உணர்வு!

பல நாள் பட்டினியாகக் கிடக்கும் ஒருவன், கஞ்சித் தொட்டிக்குக் கலயம் ஏந்தி வருவது போன்றது, இதரர்களுக்குள்ள ஜாதி எண்ணம்!

நிர்வாணமாகக் கிடக்கும் மங்கை, மானத்தைக் காத்துக் கொள்ள ஒரு முழத் துண்டுக்குக் கையேந்துவது போன்றது, வேறு பலருக்குள்ள ஜாதி நினைப்பு!

உலகைக் காண விரும்பிய பிறவிக் குருடன், கொஞ்சம் கண்ணொளி வேண்டும் என்று முயலுவது போன்றது, இன்னும் மற்றவர்களுக்குள்ள ஜாதிபுத்தி!

ஆனால், தமக்குள்ளதாக ஆச்சாரியாரே ஒப்புக்கொண்டுள்ள ஜாதி உணர்வோ, ஆரிய புராண புருஷனான யயாதி மன்னன் விருப்பத்தைப் போன்றது!

அதாவது, யயாதி என்ற ஒரு அரசன், பல ஆண்டுகள் மன்னனாக இருந்துவந்தான்; முதுமைப் பருவம் பெற்றுவிட்டான்; பதவியை விட்டுச் செல்ல அவனுக்கு மனம் வரவில்லை; எனவே, மானத்திலிருந்து தப்ப முதுமையைத் துறந்து, இளமையை நாடி நின்றான்.

இறப்பு, இளமையைத் தழுவாது, முதுமையைத்தான் அணைத்து கொள்ளுமோ என்ற பொருந்தாமை குறித்த ஆராய்ச்சித் தேவையில்லை! யயாதியின் ஆசை நின்ற நிலையை மட்டுமே நாம் எடுத்துக் கொள்ளுவோம்.

மன்னனாக இருந்த அதிகாரத்தைப் பருகிக் கிடந்த யயாதிக்கு, அதைவிட்டுப் பிரிய அவனுடைய மனம் ஒருப்படவில்லை; அதிகாரஞ் செய்வதிலே அவ்வளவு மோகம் அவனுக்கு இருந்தது. இந்த யயாதியின் போக்கை ஒத்திருப்பதுதான் சி. ஆர்.-க்குள்ள ஜாதி உணர்வு!

'சுகம்' பொதுவாகக் கூடாது, 'வாழ்வு அனைவருக்கும்' என்ற நிலை ஏற்படக்கூடாது, சமத்துவம் பேசுகிறவர்களையும், போட்டிக்கு நிற்கிறவர்களை அடக்கி ஒழிக்க வேண்டும் என்பதுதான், ஆச்சாரியாருக்குள்ள 'ஜாதி உணர்வின்' தன்மை, பயங்கரப் பண்பு!

விடுதலைப் போராட்ட காலத்தில், ஆங்கிலேயனுடைய நீதிமன்றத்தில், வழக்கறிஞர்களாக இருக்கக் கூடாது என்றும், ஆங்கிலக் கல்லூரிகளில் சேர்ந்து கற்கக்கூடாதென்றும ஒரு கிளர்ச்சியை காங்கிரஸ் மேற்கொண்டது. இந்தக் கிளர்ச்சியில் ஆச்சாரியார் தீவிரமாக ஈடுபட்டார். பல கூட்டங்களிலே, இது பற்றி சொற்பொழிவாற்றினர். பலர் இவர் சொல்கேட்டு கெட்டழிந்தவர்களும் உண்டு. காங்கிரஸ் மேற்கொண்ட 'பகிஷ்கார' முறை நல்லதோ கெட்டதோ என்பது வேறு விஷயம்.

அந்தப் 'பகிஷ்கார' பிரசார காலம் உச்சத்தில் இருந்த பொழுது. காலஞ்சென்ற அல்லாடி கிருஷ்ணசாமி அவர்களை வலிய சென்று, ஆச்சாரியார் சந்தித்திருக்கிறார். கொள்கை வெறி கொண்டவர்கள், யாராக இருந்தாலும், ஆங்கிலேய நீதிமன்றத்தைப் 'பகிஷ்கரித்து'விட்டு வெளியேறி வர வேண்டுமென்றுதான் அல்லாடியை வற்புறுத்தி இருப்பார்கள். லட்சியத்தில் நம்பிக்கைக் கொண்டவரிடம் எதிர்பார்க்கக் கூடியதும் இதுதான். ஆனால், ஆச்சாரியார் அப்படி ஒன்றும் செய்யவில்லை. அல்லாடியை வற்புறுத்தாமலே, அவரை சந்தித்துப் பேசிவிட்டு வந்திருக்கிறார்.

ஆங்கில நீதிமன்றங்களை அனைவரும் பகிஷ்கரிக்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சி தொடங்கியுள்ள போராட்டம், தீவிரமாக நாட்டிலே நடந்துகொண்டு இருக்கிறது இந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துகிறவர்களில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆச்சாரியாரும் ஒருவர். 1942-ல் மேற்கொண்ட ஆகஸ்டு கொள்கை பிடிக்காதது போல, அவருக்கு, அந்தக் காலத்தில், 'பகிஷ்கார' கொள்கை பிடித்தமில்லாமலும் இல்லை. அதில் இரண்டறக் கலந்து, ஊர் ஊராகப் பிரசாரமும் ஆச்சாரியார் செய்துவந்திருக்கிறார்.

இந்தக் கட்டத்தில் சிறந்த வழக்கறிஞர் என்று ஆச்சாரியாரின் பாராட்டுதலுக்குரிய அல்லாடியைச் சந்தித்துப் பேசுகிறார். சந்தித்துப் பேசினாரே யல்லாது, ஆங்கில நீதிமன்றத்தைத் தொலைத்துத் தலைமுழுகிவிடும்படி அல்லாடியை ஆச்சாரியார் வற்புறுத்தவில்லை. வற்புறுத்தவில்லையானாலும் ஒப்புக்காவது கேட்டுக்கொள்ளவும் இல்லை. ஆனால், வேறு, நேர்மாறான முறையில் ஆச்சாரியார், அல்லாடி விஷயத்தில் நடந்துகொண்டு இருக்கிறார்.

'ஆச்சாரியார் பேச்சுக்கு அல்லாடி அவர்களிடம் மதிப்பிருக்காது. மதிப்பில்லாத விஷயத்தைக் கிளப்பி, பின் அவமானம் அடைவானேன்,' என்று ஆச்சாரியார் அல்லாடியை வற்புறுத்தாமல் இருந்திருக்கலாம் என்று, சிலர் சமாதானம் கூறலாம். அப்படியும் சொல்வதற்கில்லை.

ஆச்சாரியாரே, இந்த சந்தேகத்தையும் தமது வாயுரையினாலேயே போக்கி விடுகிறார். அதாவது அல்லாடி மரணத்திற்குப் பிறகு, அவர் அனுதாபக் கூட்டத்தில் பேசிய பொழுது ஆச்சாரியார் குறிப்பிட்டார்.

"நான், அவரை (அல்லாடி) வற்புறுத்தியிருந்தால், வக்கீல் தொழிலைவிட்டு வெளியேறி இருப்பார்,"—என்று.

ஆச்சாரியார் சொல்லுக்கு அல்லாடியிடம் நல்ல மதிப்பு இருந்திருக்கிறது. ஆச்சாரியார் வற்புறுத்தியிருந்தால், அதன்படி அல்லாடி நடந்திருப்பார், என்று ஆச்சாரியாரே சுட்டிக் காட்டுகிறார்.

உண்மை நிலை, இருவருக்கும் இருந்தத் தொடர்பின் தன்மை, இப்படி இருந்தும், ஆச்சாரியார், அல்லாடியை விலக வேண்டுமென்று வற்புறுத்தாமல் இருந்து வந்திருக்கிறார் என்றால், ஆச்சாரியாரின் இந்தப் போக்கில் மறைந்து கிடக்கும் உண்மையை காங்கிரஸ் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வெளியில் நடைபெறும் 'பகிஷ்கார'க் கூச்சலைக் கேட்டு எங்கு அல்லாடி போன்றவர்கள், நீதி மன்றத்தை விட்டு வெளியேறி விடுகிறார்களோ என்ற அச்சம் ஆச்சாரியாருக்கு ஏற்பட்டு இருக்கிறது. எனவே, ஆச்சாரியார் அவசர அவசரமாக வலிய சென்று, அல்லாடியைச் சந்தித்து இருக்கிறார். "யார் வெளியேறினாலும், வெளியேறாமல் போனாலும் உங்களுக்கென்ன? நீங்களும் வெளியேற வேண்டாம்" என்றே ஆச்சாரியார் அல்லாடிக்கு அறிவுரை கூறி இருக்கிறார் என்றே யூகிக்க இடமிருக்கிறது.

மற்றொரு முறையாகப் பார்த்தாலும், 'பகிஷ்காரம்' குறித்து விவாதிக்க அல்லாடியே ஆச்சாரியாரை அழைத்திருக்கிறார், இருவரும் அது குறித்து விவாதித்து இருக்கிறார்கள், இருவரின் விவாத முடிவு, அல்லாடியைப் பழைய போக்கிலேயே இருக்க உதவி செய்வதாக இருந்திருக்கிறது, என்று பெறப்படுகிற உண்மையை மறைத்து விடுவதற்கில்லை

எனவே, ஆச்சாரியார் கொண்டுள்ள 'ஜாதி உணர்ச்சி,' மற்றவர்கள் கொண்டுள்ள 'ஜாதி உணர்ச்சி'யைவிட அக்கிரமமானது, காட்டுமுறை கொண்டது என்பதை காங்கிரஸ் நல்லவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆச்சாரியார் கூறியுள்ளதுபோல,

"இதர விஷயங்களில் சிறந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள், இந்த ஜாதி விஷயத்தில் தவறு செய்து கொண்டு இருப்பதனால். நாட்டு முன்னேற்றத்துக்குத் தடங்கலாய் இருக்கின்றனர்."

ஜவகரின் 'விசாலம்' கரைகிறது!

திருவள்ளுவர் முன்னணி கழகம்

சென்னை, அக். 12—

4—10—53ல் நடைபெற்ற அங்கத்தினர்கள் கூட்டத்தில், தோழர் இரணதீரன் கழக செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் சி ஆர். பாலசுந்தரம் கழகத்தின் தலைவராக இருக்க இசைந்தார். பின்னர் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

கர்னாடக மாநில அமைப்புக்கு மங்களூர் கோரிக்கை

மேலும் தாமதிக்க வேண்டாமென மாநில, மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை

மங்களூர், அக் 12—

மங்களூர் நகராட்சி மன்றம், ஐக்கிய கர்நாடக மாநில அமைப்பு உடனடியாக தீர்மானிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருக்கிறது.

தீர்மானத்தில், மாநில அமைப்பு அவசியமில்லாமலே தாமதப்படுத்தப்பட்டு வந்திருப்பதாகவும், உடனடியாக நிர்மாணிக்க மத்திய சர்க்காரும், தொடர்புடைய மாநில சர்க்காரும் முன்வர வேண்டுமென்று குறிக்கப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே, கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத் கிளப்பியுள்ள அகண்ட கர்நாடகக் கோரிக்கையையும், அதற்காக மேற்கொண்டுள்ள கிளர்ச்சியையும் ஆதரிப்பது என்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு, ஒரு திருத்தமாகவே குறிப்பிட்ட தீர்மானத்தை மங்களூர் நகராட்சி மன்றம் நிறைவேற்றி இருக்கிறது.

நெல்லையில் தமிழர் மாநாடும், புலவர் மாநாடும்

நெல்லை, அக். 9—

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், சென்னை மாகாணப் பதினான்காவது தமிழர் மாநாடும்-புலவர் மாநாடும் 18—10—53 ஞாயிறன்று, திருநெல்வேலியில் நடைபெறும்.

தமிழர் மாநாட்டிற்கு, திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமை வகிப்பார்.

திரு. ஏ. சுபபதி அவர்கள் துவக்கிவைப்பார்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள், புலவர் மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார்.

திரு ஆ சுப்பையா அவர்கள் துவக்கிவைப்பார்.

மாநாட்டுத் தீர்மானங்கள் 17—10—53-க்குள் அனுப்பப்பெறுதல் வேண்டும் என, திரு. இ. மு. சுப்ரமணியம் அவர்கள் அறிவிக்கிறார்.

முன்னாள் மன்னர் ஆவல்!

புதுடெல்லி, அக். 13—

மேற்குக் கடற்கரையிலுள்ள சாவர்வாடி ராஜ்யத்தை ஆண்ட முன்னாள் மன்னர், நேருவைச் சந்தித்து, தமக்கு தேச சேவை செய்ய சந்தர்ப்பம் அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். இவருக்கு, போட்டோ பிடித்தல், ஓவியம், சிற்பம், சாஸ்திரீய சங்கீதம், முதலியவைகளில் நல்ல தேர்ச்சி உண்டாம்.

ஆராய்ச்சி அறிவு அங்கே!

கராச்சி, அக். 13—

'ரூபி' என்னுமிடத்தில், பூமிக்குக் கீழ் கிடைக்கும் இயற்கை வாயுவை உபயோகிப்பது பற்றி ஆராய்ச்சிகள் நடத்த, பாகிஸ்தான சர்க்கார் ரூ. 6,50,000 அனுமதித்திருக்கிறது ரூ 13 கோடி செலவில் இத்திட்டத்தை பூர்த்தி செய்ய, ஐ. நா. உலக பாங்கி ஆலோசித்து வருகிறது.

'பிரிட்டிஷார் விரட்டி அடிக்கப்படுவர்'

எகிப்து தலைவரின் அச்சுறுத்தல்

கெய்ரோ, அக். 12— இங்கிலாந்தில் நடைபெற்று வரும் கன்சர்வேடிவ் கட்சியினரின் மாநாட்டில் சூயஸ் கால்வாய் பாதுகாப்பு தளத்தை விட்டு வெளியேற பிரிட்டிஷார் விரும்பவில்லை என்று நிலவிய கருத்தைக் கண்டித்து, எகிப்து தலைவர் நகிப் பேசும்போது,

"எந்த விலை கொடுத்தும், எந்த முறையை மேற்கொண்டேனும் பிரிட்டிஷாரை விரட்டி அடிப்போம்." என்று குறிப்பிட்டார்.

"எகிப்தின் சம்மதம் இல்லாமல், தங்களுடைய படை பலத்தை இரு மடங்கு, மும்மடங்காகப் பெருக்கிக் கொண்டாலும் பிரிட்டிஷார் சூயஸ் பகுதியில் இருக்க முடியாது" என்று நகிப் கூறினார்.

"முழுச் சுதந்திரத்தையும், தனி நாட்டு உரிமையையும் எகிப்து பெற்றுத் தீருவது என்ற முடிவிற்கு வந்து விட்டது" என்றும் அவர் கூறினார்.

"சுதந்திரம் பெறுவோம்; இன்றேல், உயிரைத் துரும்பென மதிப்போம்!"

கெய்ரோ, அக். 13— "எகிப்தியர்களின் உரிமைகளைப் பிரிட்டன் அங்கீகரிக்கத் தவறினால், பெரும் சுதந்திரப் போராட்டத்தை பிரிட்டிஷார் எதிர்பார்க்க நேரிடும்; எகிப்தின் எதிர்காலம், அந்நாட்டின் 2,20,00,000 பேர் கையில் இருக்கிறது; இவர்கள் சுதந்திரத்திற்காக உயிரையே தியாகம் செய்ய முனைந்துள்ளனர்; எகிப்தில், நிலைமை இப்போது அடியோடு மாறி விட்டது என்பதை பிரிட்டிஷார் அறியட்டும்," என்று மந்திரி அப்துல் நஸீர், ஓர் சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

"இப்போதுள்ள சர்க்கார், தேசிய லட்சியத்தை அடைய, பேச்சுவார்த்தைகள் முறையைத்தான் எப்போதும் கடைபிடிக்கும், என்று, எண்ணுவது தவறு," என்றும் அவர் எச்சரித்தார்.

உலகத்தின் நீண்ட நதி வரண்டுவிட்டது!

நியூயார்க், அக். 10— அமெரிக்காவில், மிஸ்ஸோரி, மிஸிஸிபி நதி வரண்டு, கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. உலகத்திலேயே, இதுதான் மிக நீளமான நதி எனப் புகழ்பெற்றது. 4,200 மைல் நீளமுள்ள இந்த நதியில், முழங்கால் அளவு தண்ணீர் கூட இல்லை. மிஸ்ஸோரி ராஜ்யத்தில் மட்டும், நல்ல மண் வளமுள்ள பிரதேசத்தில், 20 கோடி டாலர் பெறுமான பயிர்கள் காய்ந்து தீய்ந்து போயிருக்கின்றன.

உண்மையா ?

லண்டன், அக். 10— ஸ்டாலின் மகனும், ரஷ்ய விமானப் படையின் உபதலைவராக ஒரு காலத்தில் இருந்தவருமான லெப்டினென்ட்-ஜெனரல் வாஸிலி ஸ்டாலின், சைபீரியன் சிறைமுகாம் ஒன்றில் ஜீவாந்திர சிறைவாசம் அனுபவித்து வருவதாக 'டெய்லி ஸ்கெட்ச்' செய்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

ஆபத்து அருகில்......!

லண்டன், அக். 11— பிரிட்டிஷ் கயானாவில், அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டு, துருப்புகள் இறக்கப்பட்டதை யொட்டி, தலைநகருக்கு யாரும் நெருப்பு வைக்காமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தலைநகரமான ஜார்ஜ் டவுனில் எல்லா வீடுகளும் மரத்தினால் கட்டப்பட்டதாகையால், யாராவது தீ வைத்துவிட்டால் நகரமே எரிந்து சாம்பலாகிவிடும்.

வெளிநாடுகளுக்கு நூல் ஏற்றுமதி

சென்னை, அக். 13— தென்னிந்தியாவில் உற்பத்தியாகும் நூல்களில் ஒரு பாகத்தை பர்மா முதலிய வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்ய சர்க்கார் அனுமதிக்க வேண்டுமென்று மில் முதலாளிகள் சர்க்காரிடம் கேட்டிருக்கின்றனர்.

ராஜ்யத்தில் மின்சார வெட்டு நீக்கப்பட்ட பிறகு, மில்களில் முழு உற்பத்தி ஆரம்பமாகியுள்ளதெனவும், மார்க்கெட்டில் பலரக நூல்கள் தாராளமாகக் கிடைக்கிறதென்றும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். மேலும், கைத்தறி நெசவாளர் பிரச்சினை சென்ற ஆண்டைப்போல் அவ்வளவு மோசமாக இல்லையென்றும் கூறியுள்ளனர்.

இலங்கை பிரதமர் ராஜினாமா

புதிய மந்திரிகளின் பட்டியல் நாளை வெளியாகும்

கொழும்பு, அக். 13— இலங்கைப் பிரதமர் சர். டட்லி சேனநாயகா, இன்று காலை கவர்னர் ஜெனரல் லார்டு ஸோல்பரியிடம் தனது ராஜினாமாவை சமர்ப்பித்தார்.

லார்டு சோல்பரி, ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு, புது மந்திரி சபை அமைக்கும்படி சர் ஜான் கொத்தலாவலாவை அழைத்தார்.

மந்திரி சபை அமைப்பதற்கு ஜான் கொத்தலாவலா இசைந்தார்.

மந்திரி சபையில் யார் யார் இருப்பார் என்பதை சர் ஜான் புதன்று அறிவிப்பார்.

புதிய மந்திரி சபையில் 10 மந்திரிகள் இருக்கலாமென தெரியவருகிறது.

ஜான் கொத்தலாவலா, சேனநாயகா மந்திரி சபையில் போக்குவரத்து இலாகா மந்திரியாக பணியாற்றியவர்.

தனது ராஜினாமா பற்றி சேனநாயகா விடுத்துள்ள அறிக்கையில், தனக்கு ஓய்வில்லாத அலுவல் காரணமாக அசௌக்கியம் ஏற்பட்டுவிட்டதாகவும், இழந்த பலத்தைப் பெற ஓய்வு எடுத்துக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுரையில் தடை உத்தரவு

மதுரை, அக். 12— மதுரை போலீஸ் உதவி சூப்ரண்டெண்ட் என். ரத்னாகர் ராவ் அறிவிப்பதாவது, மதுரை முனிசிபல் எல்லைக்குள்ளும், திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து பிரதேசத்திலும், லைசென்ஸ் இல்லாமல் ஊர்வலம் நடத்தவோ, கூட்டங்கள் நடத்தவோ, தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதே தடையுத்தரவு கல்யாணம், அக்கச் செய்தி இவைகளைப் பாதிக்காது.

இந்தத் தடை உத்தரவு ஒரு மாத காலத்திற்கு அமுலில் இருக்கும். ஒலி பெருக்கிகள் அமைப்பதற்கும், லைசென்ஸ் கட்டணம் செலுத்தப்படவேண்டும்.

திருச்சி நகர தி. மு. க. தோழர்களுக்கு வேண்டுகோள்

திருச்சி, அக். 10— கல்லக்குடி போராட்டத்தின் 2-வது படையில் தோழர் காரைக்குடி ராமசுப்பையா தலைமையில் சென்று கைது செய்யப்பட்டு 3 மாத சிறை தண்டனை அடைந்த 33 தோழர்களும் 15-10-53-ந்தேதி காலை 10 மணிக்கு திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலை பெறுகிறார்கள்.

எனவே அவர்களை வரவேற்க திருச்சி நகர தி. மு. கழக தோழர்கள் அனைவரும் அன்று காலை 9 மணிக்கு, திருச்சி மத்திய சிறையின் முன் வந்து வரவேற்பு அளிக்க வேண்டுகிறேன்.

அன்று மாலை 5 மணிக்கு, மணிக்கூண்டிலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்படும். மாலை 6 மணிக்கு வன்னிமரத்தடியில் சிறை சென்று மீண்ட தோழர்களுக்கு பாராட்டுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் இயக்கக் கொடிகளுடன் வரவேண்டுகிறேன் என எம். எஸ். மணி அறிவிக்கிறார்.

திருப்பூர் செயற்குழு உறுப்பினர்களுக்கு!

14—10—53 புதன் இரவு 9 மணிக்கு செயற்குழு கூடும். அதுசமயம் முக்கிய பொருள் பற்றி ஆலோசிக்கப்படும். செயற்குழு உறுப்பினர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், பல்லடம் வட்டம் கிளைக் கழகச் செயலாளர்களும் இதையே அழைப்பாக ஏற்று வரவேண்டுமாய் தோழர் என். பால்ராசு, கேட்டுக்கொள்கிறார்.

தலவாடி பிர்காவை மைசூருடன் இணைக்க முயற்சி

கோபி, அக். 11— கோவை மாவட்டத்தைச் சார்ந்த தலவாடி பிர்காவை மைசூருடன் இணைக்க வேண்டுமென்று, இங்கு, நேற்று நடைபெற்ற மாநாட்டில், கோரிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. பிர்காவைச் சேர்ந்த சுமார் 3,000 மக்கள் கலந்து கொண்டனர்.

மைசூரும், கோவையும் ஒன்று சேரும் இடத்தில், 50 கிராமங்களைக் கொண்டதாகவும், 250 சதுர மைல் விஸ்தீரணம் உடையதாகவும் தலவாடி பிர்கா இருந்து வருகிறது.

அங்கு வசிக்கும் 20,000 மக்களில் 98 சதவிகிதத்தினர் கன்னட மொழியினர் என்றும், மைசூருடன் இணைவதை அவர்கள் விரும்புகின்றார்கள் என்றும் தீர்மானம் குறிப்பிடுகிறது.

காலநிலையில் கோளாறும்!

அடிலெயிட், அக். 13— ஆஸ்திரேலியாவில், அணுகுண்டு பரீட்சை, எந்த நிமிடத்திலும் நடப்பதற்கு ஏற்பாடுகள் பூர்த்தி யடைந்திருக்கின்றன. ஆனால் காலநிலை இன்னும் ஒத்துவரவில்லை. அணுசக்தி மேகங்களை, மேற்கு நோக்கி அடித்துக் கொண்டு போக தென்கிழக்கிலிருந்து காற்றடிக்க வேண்டும். ஆனால் பரீட்சை நடக்கவேண்டிய இடத்தில் வடகிழக்காக காற்று அடித்துக்கொண்டிருக்கிறது.

ரூ. 40 அபராதம் அல்லது 42 நாள் சிறைவாசம்

ஏழு வாய்தாக்களுக்குப் பின் இந்தத் தீர்ப்பு!

அக்கிராயபாளையம், அக். 12- அக்கிராயபாளையம் தி. மு. கழகக் கிளையின் சார்பில், ரயில் நிறுத்தப் போரில் கலந்து கொண்ட தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு ஏழு வாய்தாக்களுக்குப் பின்னர், 6—10—53 அன்று ஆத்தூர் வட்ட சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில், தலா ரூ. 40 அபராதமும், கட்டத் தவறினால் ஆறு வாரம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்த தோழர்கள் நா. இராமசாமி, ரா. இராசன், மு. நாராயணன், மு. முருகேசன் ஆகியோர் சிறை புகுந்தனர்.

சிறை மீண்ட தோழர்கட்கு வரவேற்பு

★

சென்னை, அக். 12— ரயில் நிறுத்தப் போரில் பங்கேற்று மூன்றுமாத கடுங்காவல் தண்டனை பெற்று வேலூர் சிறையிலிருந்த தோழர் எம். கணபதி (திருவொற்றியூர்), மற்றும், ஆவடித் தோழர்கள் பி. ராதாகிருஷ்ணன், பி. ஏ. ராமன், எம். என். ஏகாம்பரன், கே. கோவிந்தசாமி, என். ராஜரத்தினம், டி. கே. ராமமூர்த்தி, எம். பி. ரங்கம், சி. விஜயராகவன், டி. டி. சண்முகம் (பட்டாபிராம்) ஆகியோர் விடுதலை பெற்றனர்.

ஏற்கனவே சிறை சென்று திரும்பிய தோழர்களுக்கும், நேற்று விடுதலையான தோழர் கணபதிக்கும் திருவொற்றியூரில் மலர் மாலை சூட்டி வரவேற்பளிக்கப்பட்டது.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம், அக். 10— 4—10—53-ல் கன்னன் கொட்டகைக்கு அருகாமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், தியாகராயர் மன்றம் (தி. மு. கழக கிளை) சார்பில் சிறை சென்ற தோழர்களுக்கு பாராட்டு அளிக்கப்பட்டது.

அவ்வமயம், கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது. பண்டித நேரு, நமது போராட்டங்களைக் குறித்தும், நம்மைக் குறித்தும் 'அறிவிலி'கள், 'காட்டுமிராண்டி'கள் என்று கூறியதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக இச்சொற்களை வாபஸ் வாங்க வேண்டுமென்றும், பிரதமர் நேரு இவ்வார்த்தைகளை உபயோகித்து, திராவிட இனத்தவரின் மனதை புண்படுத்தியதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இனியும் இம்மாதிரி தகாத வார்த்தைகளை உபயோகிக்காமலிருக்க இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

அபிவிர்த்தீசுரம்

7—10—53-ல், அபிவிருத்தீஸ்வரத்தில், ரயில் நிறுத்த அறப்போரில் 2 மாத தண்டனை அடைந்து விடுதலை அடைந்த தோழர்களான, அ. நடராசன், டி. மகாலிங்கம், என். கோவிந்தராசு ஆகியோருக்கும், கொரடாச்சேரி தி. மு. கழக சார்பில் சிறை சென்ற தோழர்களுக்கும் பாராட்டுக் கூட்டம் தோழர் வி. கனகசபை தலைமையில் நடைபெற்றது. சிறை மீண்டவர்களைப் பாராட்டி, தோழர்கள் பூ. பூவராகவன், கிருஷ்ணமூர்த்தி, டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசினர். பஞ்சாயத்து போர்டு தலைவர் க. துரைசாமி அவர்கள், சிறை சென்ற தோழர்களுக்கு தேனீர் விருந்தளித்து, மலர்மாலை அணிவித்தார். பஞ்சாயத்து போர்டுக்கு சொந்தமான பூங்காவில் கூட்டம் நடைபெற்றது. பூங்காவிற்கு, திரு. வி. க. பூங்கா எனப் பெயர் வைக்கப்பட்டது.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

92-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, இராம. சுப்பையா, மற்றும் பலர் சிறையில்

இன்று

91-வது நாள்.

விதவைத் திருமணம்

திருவள்ளூர், அக். 13— திருவள்ளூர், 19-சன்னதி முகம்மதலி தெரு, கேஸ சிலிண்டர் பீடி பேக்டரியில் 15-10-53 காலை 9 மணிக்கு, தோழர் என். ரங்கன்—தோழியர் ஆண்டாளம்மாள் (விதவைத்) திருமணம் தோழர் செயல்—மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள்: வரதன், இளமாறன் பேசுவார்கள்.

பல்கேரிய விமான தளங்களுக்கு ரஷ்ய ஆகாய விமானப் படை விரைகிறது

அமெரிக்க முயற்சிக்கு சோவியத் எதிர் நடவடிக்கை!

துருக்கியிலும், கிரீசிலும் அமெரிக்கா எல்லாவிதப் போர்ப் படைகளையும் குவித்துவருவதாகத் தெரிகிறது. இதற்கு எதிர் நடவடிக்கையாக சோவியத் ரஷ்யா எம். ஐ ஜி. என்ற ஆகாய விமானப் படை வரிசையை, பல்கேரியாவின் விமான தளங்களில் கொண்டு குவிக்கின்றன.

துருக்கியும், கிரீசும் சந்திக்கின்ற இடமான தரேஸ் பகுதியில், முதல் முதலாக, இரு நாடுகளும் கூட்டாக சமீபத்தில் ராணுவ ஒத்திகையில் ஈடுபட்டன. இதற்கு வடக்கே அருகில்தான் பல்கேரிய விமான படை தளம் இருந்து வருகிறது.

கிரீஸ் உள்நாட்டிலும், கடற்கரை ஓரத்திலும், முறையே தனது விமானப் படைகளையும், கப்பற் படைகளையும் வைத்துக்கொள்ள அமெரிக்காவிற்கு, கிரீஸ் ஒரு ஒப்பந்தத்தின்மூலம் அனுமதியளித்துள்ளது.

"புதிய கல்வித் திட்டம் பயனற்ற திட்டம்"

நெல்லை மாவட்ட ஆசிரியர் மாநாட்டில் கல்வித் திட்டக் கண்டனம்

குற்றாலம், அக். 8—

"கிராமங்களில் மக்கள் பசியால் துயர்படுகின்றனர். குழந்தைகளும் பசிக்கொடுமையில் சிக்கி வேதனைப்படுகின்றன. இந்நிலையில் அவர்கள் எப்படிப் பள்ளிக்கு வருவார்கள்? சோறு கிடைக்கும் என்றால், அவர்கள் ஜெயிலுக்குக்கூட போகத் தயாராக இருப்பார்களே."

என ஆசிரியர்கள் மாநாட்டில் பேசிய அம்பை கிருஷ்ணன் குறிப்பிட்டார்.

நெல்லை மாவட்ட ஆசிரியர் மாநாடு 3-ம் தேதியன்று குற்றாலம் சிங்கம்பட்டி மாளிகை மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து ஏறத்தாழ இருநூறு பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

கல்வித் திட்ட விவாதத்தை துவக்கிவைத்து தோழர் என் வெங்கடாசல அய்யங்கார் பேசுகையில், "புதிய கல்வித் திட்டம் வெளியிடப்பட்டதும் நாட்டில் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டதின் காரணமாகத்தான் திட்டத்தை ஆராய அரசியலார் ஒரு விசாரணைக் கமிட்டியை ஏற்படுத்தினர். இந்த விசாரணைக் கமிட்டியில் தங்கள் கருத்தைத் தெரிவிக்க ஆந்திராவிலிருந்து ஒருவரும், மலபாரிலிருந்து ஒருவரும், தமிழகத்திலிருந்து ஒருவரும் அழைக்கப்பட்டுள்ளனர். நானே தமிழ் நாட்டிலிருந்து அழைக்கப்பட்டவன்" என்றார்.

கல்வித் திட்டத்தைப் பற்றி மேலும் பேசுகையில், மாணவர்களுக்கு அரைநாளாக ஆக்கிவிட்டதால் என்ன பயன் ஏற்படும்? பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. பிற்பகலில் பிள்ளைகள் விளையாடச் சென்றுவிடுகின்றனர்.

கைத்தொழிலில் கவனம் செலுத்தவேண்டும். எனது ஊரிலுள்ள பட்டறைகளுக்கும், வயல்களுக்கும் மாணவர்களை அனுப்பி பார்த்தேன். அவர்களை இரண்டு நாள்தான் சேர்த்தார்கள். பெற்றோர்களோ பிள்ளைகளை அனுப்ப மறுக்கின்றனர். எந்தெந்த பள்ளிகளில் பிள்ளைகளுக்கு இடமில்லையென்று கூறினார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு இடம் கிடைத்துவிட்டது" என்று பெட்டர்கள் கூறிய குறிப்பிடத்தக்கது.

அடுத்து அம்பாசமுத்திரம் ஆசிரியர் தோழர் கிருஷ்ணன் பேசுகையில், "புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தினால் பயனில்லை. இத்திட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து பிள்ளைகள் பள்ளிக்கே செல்வதில்லை. இப்புதிய திட்டத்தை அரசாங்கம் கார்ப்பரேஷன் பள்ளிகளிலும், முனிசிபல் பள்ளிகளிலும் அமுலுக்குக் கொண்டுவந்து நடத்தட்டுமே! ஏன் கிராமப் பள்ளிகளுக்குக் கொண்டுவர வேண்டும்?

ஆரம்பப் பள்ளிகளில் இருக்க இடமில்லை என்ற நிலைமை எந்தப் பள்ளிகளிலும் ஏற்படவில்லையே! கிராமங்களில் மக்கள் பசியால் வருந்துகிறார்கள். பசி போகுமென்றால் ஜெயிலுக்குக் கூட போகத் தயாராக இருக்கிறார்கள்" என்றார்.

பழங்குடி பாரதி முருகேசனார் பிறந்த தின விழா

பம்பாய், அக். 9—

தமிழ் நாட்டில் கடந்த 36 ஆண்டுகளாக பழங்குடி மக்கள் நலனுக்காக அயராது உழைத்து வரும் மகா மதுரகவிஞர் வீ. வே. முருகேசனார் அவர்களின் 56-வது பிறந்த தின விழா, பம்பாய் வாழ் பழங்குடி மக்களால் 21-10-53-ல் தாராவி, கட்டவாடி மைதானத்தில் வெகு விமரிசையாய் நடைபெறும். பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவர்.

மதுரை நகர சுத்தி தொழிலாளர் சங்கம்

தோழர் கே. எஸ். சந்தானம் அறிக்கை

மதுரை, செப். 28—

மதுரை தோழர் கே. எஸ். சந்தானம் அவர்கள், இதுவரை தாம் வகித்து வந்த மதுரை நகர சுத்தி தொழிலாளர் சங்கத் தலைவர் பதவியை ராஜிநாமா செய்து கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்:

"தொழிற் சங்கங்கள் தொழிலாளர் நன்மைக்காக நடைபெற வேண்டுமே யல்லாமல், அரசியல் கட்சிகளின் ஏணிப்படியாக இருக்கக் கூடாது என்பதில், என்றும் குன்றாத நம்பிக்கையுடையவன் நான். அந்த அடிப்படையிலே தான், மதுரை நகர சுத்தி தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி, 1300 தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களின் நன்மைக்காகவே பகுதி நேரத்தைச் செலவிட்டுப் பணியாற்றி வந்தேன்: 22 நாட்கள் உண்ணாவிரதமும் இருந்து உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறேன்; நான் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த காலத்தில், மேற்படி சங்கக் காரியதரிசியும், சில கமிட்டி மெம்பர்களும் சேர்ந்து எனக்கும் பெரும்பாலான தொழிலாளர்களுக்கும் தெரியாமல், மேற்படி சங்கத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள, தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரசில் இணைத்துவிட்டார்கள். ஜீவா படிப்பகம் என்ற ஒரு கம்யூனிஸ்டு ஸ்தாபனத்தை நிறுவி, இச்சங்கத்தின் கமிட்டி மெம்பர்கள், தொழிலாளர்கள் சிலரை, அதில் சம்பந்தப்படுத்தி விட்டார்கள். மேலும், உண்ணாவிரத காலத்தில், தொழிலாளர்களிடத்திலும், பொதுமக்களிடத்திலும், வசூலிக்கப்பட்ட பணத்தைப் பொருளாளர் வசம் ஒப்புவிக்காமலே வீண் விரயத்திற்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.

மேற்சொன்ன காரணங்களால் இனியும் அச்சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து நகர சுத்தி தொழிலாளர்களுக்கு எத்தகைய நன்மையும் செய்ய முடியாது என்பதை நான் உணருகிறபடியால், இதுவரை என்னோடு ஒத்துழைத்து வந்த தொழிலாளர் தோழர்களுக்கும், கமிட்டி மெம்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மேற்படி சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து ராஜிநாமா செய்கிறேன்.

மதி வளர்ச்சி நாடக மன்றம்

நாகூர், அக். 9—

4—10—53ல், நாகூர் இசை முரசு ஈ. எம். அனிபா அவர்கள், மன்றத்தையும், அண்ணாதுரை உருவப் படத்தையும் திறந்து வைத்தார். தோழர் திரு என். வி. சபாபதி அவர்கள் தலைமையில், தோழர்கள் எம். எம். என். நாதன், ஆர். கோவிந்தராசு, ஈ. எம். அனிபா முதலானோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. கழகங்கள் துவக்கம்

★

குராப்பள்ளி, அக். 9—

7—10—53ல், 'பகுத்தறிவு' ஆசிரியர் ப. கண்ணன் அவர்கள் தலைமையில் குராப்பள்ளி திராவிட முன்னேற்றக் கழகக் கிளை நிறுவப் பட்டது. அதுபோது, தோழர்கள் கு. சி. கந்தசாமி செயலாளராகவும் சி. குருநாதன் துணைச் செயலாளராகவும் இரா. சமதர்மம் மாவட்டப் பிரதிநிதியாகவும் என். கிருட்டிணன் பொருளாளராகவும், மற்றும் டி. வெங்கிடசாமி, த. சீதாராமன், பி. நாகராசன், பி. டி. கோவிந்தன், ப. செல்லப்பன், க. கோவிந்தராசன், கு. பாண்டுரங்கன் ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

மாதுங்கா (பம்பாய்)

7—10—53-ல், மாதுங்காவில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் க. மன்னர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், ஜோதிராயகம் செயலாளராகவும்; ஜே. எஸ். லாசர் துணைச் செயலாளராகவும், க. மன்னர் பொருளாளராகவும்; ஈ. அருணாசலம் விளம்பர உறுப்பினராகவும்; தோழர்கள் இ. எஸ். எஸ். பிச்சையா, போ. தர்மராஜ், கே. எஸ், கலைதாசன், எஸ் வேலையா, ஓய். ஜோசப், என். என். பாண்டியன் தோ. அ அன்புசெழியன் கு சீனிவாசன், பொன் பி. சபாபதி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகத் திறப்பு விழாவை நவம்பர் மாதம் முதல் வாரத்தில் அதிராம்பட்டினம் தோழர் என். எஸ் இளங்கோ அவர்களைக் கொண்டு நடத்துவதென தீர்மானிக்கப் பட்டது. தீர்மானங்கள் பல நிறைவேறின.

தன்னியூர்

17—9—53ல் தன்னியூர் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் என். கே. காந்தி செயலாளராகவும், என். எம். நாச்சிமுத்து துணைச் செயலாளராகவும், என். எம். சின்னப்பன் பொருளாளராகவும், என். கே. காந்தி மாவட்டப் பிரதிநிதியாகவும், 11 தோழர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம், இராசவீதி, பன்னீர்செல்வம் படிப்பக (தி மு கழகக் கிளை) த்தின் புத்தாண்டு நிர்வாகிகளாக தோழர்கள் சி. என். பாலன் செயலாளர்; பூங்காவனம் துணைச் செயலாளர்; கே. ஆர். பாலசுப்ரமணியம் பொருளாளர்; இரா. வெங்கடேசன், கே. ஆர். பாலசுப்ரமணியம் ஆகியோர் நகர கமிட்டி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கன்னிவாடி

8—10—53ல், பொன்னப்பா இல்லத்தில், கன்னிவாடி தி. மு. கழக (கிளை)த் துவக்க விழா தோழர் காரக்கோட்டை கே. என் கண்ணுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தி. மு. கழகச் செயலாளர் க. சின்னமுத்துசாமி பேசினார். பின்னர், கீழ்க்கண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டது:—

பொன்னப்பா செயலாளர்; வ. ரா. குழந்தைசாமி துணைச் செயலாளர்; கே. என். குப்புசாமி பொருளாளர்; கே. என். சந்திரசேகரன் மாவட்டப் பிரதிநிதி; ஆர் முருகேசன் விளம்பர உறுப்பினர்; வி. ஆர். திருமலைசாமி, என். சண்முகம், கே. டி. நாராயணசாமி, செந்திவேல், வி. ராசகோபால், கே. கே. பழனிச்சாமி, சி. கிருஷ்ணசாமி ஆகியோர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

100 ஏக்கர் நிலங்களுக்கு மேல் உள்ள நிலச்சுவான்தார்கள்

சென்னை, அக். 11—

100 ஏக்கரா நிலங்களுக்கு மேல் சொந்தமாக நிலம் உள்ள நிலச்சுவான்தார்கள் எண்ணிக்கையை இந்திய சர்க்கார் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தியாவில், இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் சுமார், 50,000 பேர் உள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரில் 100 ஏக்கருக்கு மேற்பட்டுள்ள நிலச்சுவான்தார் ஒருவர்கூட இல்லை.

ஹைதராபாத்தில் 57,216 பேர் உள்ளனர்.

சென்னை மாகாணத்தில் மட்டும் 11,248 பேர் உள்ளனர்.

பீகார், மேற்குவங்கம், மத்திய பாரத் இவைகளின் புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை.

மத்தியப் பிரதேசத்தில், 27,600 பேர் உள்ளனர்.

ராஜஸ்தான், மூன்றாவது ஸ்தானத்தையும், பம்பாய் 4-வது ஸ்தானத்தையும் பெறுகிறது.

இதர மாகாணங்களில், 100 ஏகராவுக்குமேல் நிலமுள்ளவர்கள்:—

கிழக்கு பஞ்சாப்: 11,685;
அஜ்மீர்: சுமார் 225;
அஸ்ஸாம்: 1,011;
போபால்: 812;
குடகு: 443;
டில்லி: 110;
ஹிமாசல பிரதேசம்: 112;
கட்ச்: 513;
மணிபுரி: 10;
மைசூர்: 2,642;
ஒரிஸா: 3,568;
பெப்சு: 949;
திருவாங்கூர்-கொச்சி: 1,135;
விந்தியப் பிரதேசம்: 1,912.

தி. மு. கழக செயற்குழு கூட்டங்கள்

★

காங்கயம்

8—10—53-ல், தோழர் ஏ. எஸ் நாதன் அவர்கள் தலைமையில், தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கழகப் பொறுப்பாளராக தோழர் ஏ. எஸ் நாதன் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன், பண்டித நேருவின் பொறுப்பற்ற பேச்சை வன்மையாகக் கண்டித்தும், புதுக் கல்வித் திட்டத்தைக் கைவிடக் கோரியும், திரு வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இடைப்பாடி

7—10—53-ல், தி. மு கழக செயற்குழுக் கூட்டம் தோழர் பா. பண்டரிநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் சிறை மீண்ட தோழர் சோ. மாரியப்பன், கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பா. பண்டரிநாதன் ஆகியோரைப் பாராட்டியும், பண்டித நேரு தமிழர்களைக் 'காட்டுமிராண்டி'கள் என்று கூறியதையும், ஆச்சாரியாரின் சமீபகாலப் பேச்சுகள் ஆகியவற்றைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சலகண்டபுரம்

5—10—53ல், செயலாளர் தலைமையில், உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, நெசவாளர்களுக்கு சர்க்கார் தக்க உதவி செய்ய வேண்டுமென்று கோரியும், இம்மாத இறுதியில் சேலம் பகுதிக்கு வரும் ஆச்சாரியாருக்கு கருப்புக் கொடி காட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

★

சிவில்லிபுத்தூர்

2—10—53-ல், நாயர் சதுக்கத்தில், தி மு. கழக சார்பில், மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது அது சமயம், தோழர் ஆ திராவிடமணி அவர்கள் தலைமையில் தோழர் வசனபித்தன், தோழியர்கள் அருண்மொழி பி. ஒ எல்., பூங்கோதை ஆகியோர், மும்முனைப் போராட்டங்களைப் பற்றியும், தி. மு. கழகத்தின் இலட்சியத்தைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில், அத்தாக்குடிவழக்கு நிதிக்காக ரூபாய் 10/ தோழியர் அருண்மொழி வசம் கொடுக்கப் பட்டது. பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய்

அந்தேரி கோல்டுங்கரி தி. மு. கழக சார்பில், குர்லா ஜெரிமரியில் 7-10-53-ல், ஒரு பொதுக் கூட்டம் தோழர் சி துரைசிங் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் என். கணேசன், பி. செண்பகப் பாண்டியன், எஸ். எம். பாண்டியன் ஆகியோர் பேசினர்.

உங்களுக்குத் தெரியுமா?

★

புதுடெல்லி, அக் 12—

1 குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களின் மூலம், இந்தியாவுக்கு, 1952—53-ல், 17 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வெளிநாட்டு நாணயச் செலவாணி கிடைத்திருக்கிறது.

2. பீகாரில் 130 லட்சம் ஏகராவுக்கு அதிகமான பிரதேசத்தில் அரிசி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது; ஆனால் மாநில விகிதாசாரம் மிக அதிகமாக இருப்பது அஸ்ஸாமிலேதான். அந்த ராஜ்யத்தில் ஏக்கருக்கு 900 பவுண்டுக்குமேல் கண்டு முதல் கிடைக்கிறது.

3 இந்தியாவின் வெளிநாட்டு தந்தி-டெலிபோன் போக்குவரத்து ஸ்தாபனம் மூலமாக, பிரதி ஆண்டும் சுமார் 10,000 டெலிபோன் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன; சுமார் 100 ரேடியோ போட்டோக்கள் அனுப்பப்படுகின்றன.

4. சென்ற இரண்டு ஆண்டுகளில் கோவா, டாமன் ஆகிய இடங்களிலிருந்து கள்ளத்தனமாக இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதாகப் பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளின் பெறுமானம் சுமார் 63.47 லட்ச ரூபாயாகும்.

5. 1952—53-ல், சப்ளை-விற்பனை டைரக்டர் ஜெனரல் ஸ்தாபனம், 11.84 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரங்களையும், உதிரி பாகங்களையும் வாங்கியது; அவற்றில், இந்தியாவில் வாங்கப்பட்டவைகளின் பெறுமானம் சுமார் 11.22 கோடி ரூபாயாகும்.

6. இந்தியாவில் உருளைக்கிழங்கு உற்பத்தி, 1948-49-ல் 13 லட்சம் டன்னாக இருந்தது, படிப்படியாக அதிகரித்து, 1952—53-ல், 16 லட்சம் டன்னாக ஆகியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.